தேதி. 18.10.2022

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

**O.S.No.**12/2020 திரு.குமார் (எ)உத்திரகுமாரசாமி வா.சா. 1

<u>வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பிரதிவாதி என் தந்தை கொண்டத்துகவுண்டரின் முதல் மனைவியின் மகள் என்றால் சரிதான். நான் 2 வது மனைவியின் மகன் என்றால் சரிதான். கொண்டத்துகவுண்டரின் முதல் மனைவி காவேரியம்மாளும், எனது தாயார் ராஜம்மாளும் உடன்பிறந்த அக்கா தங்கை என்றால் சரிதான். காவேரியம்மாள், ராஜம்மாளுடன் உடன் பிறந்த சகோதரர் சின்னசாமியின் மனைவிதான் வெங்கிட்டம்மாள் என்றால் சரிதான். சின்னசாமியின் தந்தை பெயர் முத்துச்சாமி என்றால் சரிதான். சின்னசாமிக்கு எனது தந்தை வரவு செலவு செய்த வகையில் பணம் தரவேண்டியிருந்தது என்றால் எனக்கு தெரியாது. வழக்குரையில் உள்ள சங்கதிகளை நான் சொல்லித்தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஆமாம். வழக்குரையில் 4-ம் பத்தியில் வரவு செலவு செய்த வகையில் சின்னச்சாமிக்கு என் தந்தை வரவு செலவு செய்த வகையில் பணம் தர வேண்டியிருந்தது என்று சொல்லியிருக்கிறேன் என்றால் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் அதனால் நான் சொல்லியிருக்கிறேன். இந்த வழக்கு தவிர சத்தியமங்கலம் உரிமையில் நீதிமன்றத்தில் அ.வ.எண்.204/2019-ல் என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வழக்குரை அ.வ.எண்.204/2019 வழக்குரை என்றால் சரிதான் அது **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வழக்குரை 3-ம் பத்தியில் சின்னசாமிகவுண்டரின் தந்தை முத்துச்சாமி கவுண்டரிடம் கொண்டத்துகவுண்டர் பெற்றிருந்த கடனுக்காக வேண்டி சர்வே எண்.34/3-ல் 1.95 1/2 ஏக்கர் விஸ்தீர்ண பூமியை வாதி குடும்பத்தார் அனைவரும் சேர்ந்து 01.02.2017-ம் தேதி பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்து விட்டார்கள் என்று சொல்லியுள்ளார்கள் என்றால், வற்புறுத்தி வாங்கியதாக சொல்லியிருக்கிறோம், அவ்வாறு வற்புறுத்தி வாங்கியதாக சொல்லவில்லை என்றால் ஆமாம். அந்த சொத்திற்கு என்னுடைய பூமியில் உள்ள கிணற்றிலிருந்து நிலத்தடி பாசனம் உள்ளது என்றால், என்னுடைய தாயார் மற்றும் தாயாரின் சகோதரர் சின்னசாமி கவுண்டர் இருந்த காலத்திலும் அவ்வாறு பாசனம் செய்து கொண்டிருந்தார்கள். தற்பொழுது தண்ணீர் இல்லை. கிரயம் செய்து கொடுக்கும் போது தண்ணிர் பாசனம் கொடுக்க முடியாது என்று சொன்னேன்.

அதனால் அவ்வாறு தான் கிரயம் செய்துகொடுத்தேன். சின்னசாமி இருக்கும் போது 3 ஆண்டுகள் தாவா சொத்தில் கரும்பு தான் பயிர் செய்தார். என் தாயார் மற்றும் சின்னச்சாமி கவுண்டர் உயிருடன் இருக்கும் போது வெங்கிடம்மாளுக்கு என் தாயார் சொத்தை கிரையம் செய்து கொடுக்கவில்லை. சின்னச்சாமி இறந்த பிறகு வெங்கிடம்மாள் எத்தனை வருடம் பயிர் செய்து வந்தார் என்றால் அவர் பயிர் செய்யவில்லை. இந்த வழக்கில் கிரயம் கொடுத்த சொத்திலிருந்து என்னுடைய நிலத்திலுள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து பயிர் செய்துள்ளார் என்று அ.வ.எண்.204/2019 எனற் வழக்கில் பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் பிரதிவாதி பயிர் செய்திருந்தார் ஊர்காரர் தண்ணீர் கொடுக்கும்படி கேட்டத்தினால் தண்ணீர் கொடுத்தேன். நான் கிரயம் செய்து கொடுத்த பூமிக்கு எனது கிணற்றிலிருந்து போகவில்லை என்று சொல்லி கரும்பு பயிரை அறுவடை செய்துள்ளார் என்று அ.வ.எண்.204/2019- வழக்கின் பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியிருக்கிறேன். நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் பழைய எஸ்.எல்.எசி நான் கொத்தமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் தலைவராக இருந்தேன் என்றால் ஆமாம். என் மனைவி 6-ம் வகுப்பு வரை படித்துள்ளார். என் மகன் 3-ம் வாதி பி.இ. மெக்கானிக்கல் இன்ஜீனியரிங் படித்துள்ளார். 5-ம் வாதி BSC அக்ரி படித்துள்ளார். 4-ம் வாதி இயற்கை மருத்துவம் படித்திருக்கிறார். நாங்கள் அனைவரும் சேர்ந்து கொண்டத்துகவுண்டருக்கு கொடுக்க வேண்டிய கடனுக்காகத்தான் வா.சா.ஆ.3 கிரய பத்திரத்தை விருப்பப்பட்டு எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் இல்லை. பிரதிவாதி வற்புறுத்தி மிரட்டி வாங்கிகொண்டார். மிரட்டி வாங்கியது சம்மந்தமாக காவல்துறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் இல்லை. மிரட்டி எழுதி வாங்கியதாக சொன்ன விவரம் அ.வ.எண்.204/2019 வழக்கு தாக்கல் செய்யும் போது தெரியும் என்றால் ஆமாம். மிரட்டி வற்புறுத்தி எழுதி வாங்கியதாக அ.வ.எண்.204/2019 வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். உரிய மறுபயனுக்குத்தான் வா.சா.ஆ.3 கிரய பத்திரத்தை எழுதிக்கொடுத்தேன் என்றால் இல்லை வற்புறுத்தி தான் வாங்கினார்கள். வா.சா.ஆ.3 கிரயபத்திரத்தில் உள்ள வாசகங்கள் நான் சொன்னதா என்றால் அவர்கள் தயார் செய்தார்கள். 29.03.2012 செட்டில்மெண்ட் பத்திரத்தை வா.சா.ஆ.3 பத்திரத்தை எழுதுவதற்கு கொடுத்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தை 29.03.2012-ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து சொல்லப்பட்டுள்ளது என்றால், அந்த வாசகம் அவர்களால் தயார் செய்துகொண்டது. வா.சா.ஆ.3 கிரயபத்திரம் எழுதுவதற்கு என்னுடைய ஆதார் எண், போன் நெம்பர் கொடுத்தேனா என்றால் அவர்களே எடுத்துக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 கிரயபத்திரத்தில்

இருக்ககூடிய ஆதார் அட்டைகள் எங்கள் குடும்ப உறுப்பினர்கள் 5 பேருக்கும் சம்மந்தப்பட்டதா என்றால் ஆமாம். அதில் உள்ள போன் நெம்பர்கள் எங்கள் 5 பேருக்கும் சம்மந்தப்பட்டதா என்றால், அதில் இருக்கும் அழைபேசி என்னுடையது தான், மற்றவர்கள் அழைபேசி எண் எனக்கு தெரியாது.

**வாதி, பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒ/ம்.திரு.குமார் (எ)உத்திரகுமாரசாமி PW1 (ஒ/ம். N. Sharmila)

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.